மண்பாண்டங்களுக்கு மட்டுமல்ல; செங்கலுக்கு மண் எடுப்பதற்கும் தாங்கள் தயவுசெய்து rule–ஐ relax செய்து தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செங்கல், ஓடு, மண்பாண்டம் ஆகியவற்றிற்காக. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: Relax செய்யலாமா, வேண்டாமா (குறுக்கீடு) என்ன? இவர் relax செய்ய வேண்டாம் என்று சொல்கிறார். Relax செய்யக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, மண் எடுப்பது குறித்து. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் நீங்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் பதில் சொன்னதற்குப் பிறகு பேசுங்கள். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லட்டும், அதற்குப் பிறகு சொல்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: HACA வேண்டுமென்று சொல்கிறீர்களா, வேண்டாமென்று சொல்கிறீர்களா? (குறுக்கீடுகள்) HACA இருக்கட்டும் என்று சொல்கிறீர்களா? நான் கேட்கிறேன், மாண்புமிகு உறுப்பினர் தளவாய் சுந்தரம் அவர்கள் சொல்வது relax செய்து கொடுங்கள் என்று கேட்கிறார். நீங்கள் relax செய்ய வேண்டாம் என்று சொல்கிறீர்கள். இதுகுறித்து உங்களுக்குள் பேசி ஒரு முடிவு செய்துவிட்டு பின்னர் வாங்களேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: LOP அவர்கள் relaxation கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள்.

(இ) சென்னை மாநகராட்சி, பெருங்குடி குப்பைக் கிடங்கில் ஏற்பட்ட தீ விபத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பெருங்குடியை அடுத்து குப்பைமேடாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்ற குப்பைமேட்டில், மலைபோல் குவிந்திருக்கின்ற குப்பைகள் தீப்பிடித்து எரிந்து முழுவதுமாகச் சேதமடையாத நிலையில், தகவலறிந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாநகராட்சியின்

2022 ஏப்ரல் 29] [திரு. ஜி.கே. மணி]

அதிகாரிகளும் விரைந்து சென்று தீயணைப்புத் துறையின் உதவியோடு தீப்பிடித்ததை அணைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அது முடியாத நிலையில் இரண்டு நாட்களாக எரிந்துகொண்டிருக்கிறது. இரண்டு நாட்களும் கரும் புகையாகக் காட்சியளித்து, அந்தப் பகுதியினுடைய சுற்றுச்சூழலைச் சீர்கெடுத்திருக்கிறது மாண்புமிகு அமைச்சர், மாநகராட்சியினுடைய நிருவாகிகளின் செயல்பாட்டை நாங்கள் வரவேற்கிறோம்; மாற்றுக் கருத்து இல்லை. இருந்தாலுங்கூட விரைந்துசென்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய நடவடிக்கைகளை வரவேற்கும் அதேவேளையில், இந்தச் சம்பவம் நமக்கு மிகப் பெரிய எச்சரிக்கையை விடுத்திருக்கிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க பள்ளிக்கரணை சதுப்பு நிலக் காடுகள் பக்கத்திலிருக்கின்றன. அங்கு உள்ள குப்பை மலைபோல் காட்சியளிக்கிறது.

தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற மாநகராட்சி, பேரூராட்சி, நகராட்சி என எங்கே பார்த்தாலும் குப்பைக்கூளங்களாக இருக்கின்றன. மாவட்ட நிர்வாகம், இந்தக் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என்று பிரிக்கிறது. மக்காத குப்பைகளில் நெகிழி இருக்கிறது. அதாவது Plastic *இருக்கிறது, அது மிகப் பெரிய அச்சுறுத்தலாகவும், சவாலாகவும் இருக்கிறது. அது ஒழிக்கப்பட வேண்டிய ஒன்று. அதேநேரத்தில் கடந்த வாரத்தில்தான் புவி வெப்பமயமாதல் தினம் உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டிருக்கிறது. ஐ.நா. சபையில் அறிவுரையின் அடிப்படையில் உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டிருந்தாலும்கூட புவி வெப்பமடைதலைக் கட்டுப்படுத்த வேண்டும்.*

முற்பகல் 11–20

அதற்குக் குப்பைகளை அகற்றுவது, நெகிழியை– Plastic*–ஐ ஒழிப்பது போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல, நிலம், நீர், காற்று ஆகியவற்றை மாசுபடாமல் பாதுகாத்து, அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்ல வேண்டும். இந்த ஆண்டு கடுமையான வெப்பம் ஏற்பட்டிருக்கிறது. புவி மாசுபடுவதனால், கடுமையான வெப்பம் ஏற்படும்; மிகப் பெரிய இயற்கை பேரிடர் ஏற்படும்; உலகிற்கு இது சவாலாக அமையும் என்று உலக நாடுகளெல்லாம் பிரகடனம் செய்து கொண்டிருக்கின்றன. இதை முன்னெச்சரிக்கையாக, முன்னுதாரணமாக எடுத்துக் கொண்டு, நமது தமிழக அரசு சுற்றுச்சூழலைக் காப்பதற்கு ஒரு*

[திரு. ஜி.கே. மணி] [2022 ஏப்ரல் 29

பிரகடனம் வெளியிட வேண்டும் என்று அரசை வலியுறுத்தி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ் அவர்கள்.*

திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட, பெருங்குடி பகுதியில் உள்ள குப்பைக் கிடங்கில் இரண்டு நாட்களுக்கு முன்பு தீ விபத்து ஏற்பட்டதை அறிந்ததும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், அரசு அதிகாரிகளையும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும் உடனடியாக அழைத்து அறிவுறுத்தியன்பேரில் பெருங்குடி குப்பைக் கிடங்கிற்கு அவர்கள் விரைந்து வந்து, தீ எந்தளவிற்கு வேகமாக பரவுகின்றதோ, அதைவிட வேகமாக நடவடிக்கை மேற்கொண்டு அரசு இயந்திரம் அந்தத் தீயை கட்டுக்குள் கொண்டு வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் பதிய வைக்கின்ற நிலையில் இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

பெருங்குடி குப்பைக் கிடங்கிற்கு 7 மண்டலங்களிலிருந்து குப்பைகள் கொட்டப்பட்டு, அந்தக் குப்பைக் கிடங்கு மிகப் பெரிய அளவில் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் குப்பையில் உள்ள மீத்தேன் வாயு மூலமாகத் தீப்பற்றியது. அதைத் தடுப்பதற்கு, அரசு இயந்திரங்கள், அது காவல் துறையாக இருக்கட்டும்; தீயணைப்புத் துறையாக இருக்கட்டும் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொண்டன. சென்னை மாநகராட்சியினுடைய அலுவலர்களெல்லாம் அங்கே முகாமிட்டு, இரவு, பகல் பாராமல் பணிகளை மேற்கொண்டார்கள். மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அண்ணன் திரு. கே.என். நேரு அவர்கள், பாராளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கப்பாண்டியன், நான், மாநகர மேயர், துணை மேயர், மண்டலக் குழுவினுடைய தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள் ஆகியோரெல்லாம் உடனடியாக இணைந்து அந்தப் பணிகளை மேற்கொண்டோம்.

Sky Lift *என்ற மிகப் பெரிய வாகனங்கள் மூலமாகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மாண்புமிகு அமைச்சர் அதன் மேலேறி பார்வையிட்டார்கள். மிகப் பெரிய அளவிலான இந்தத் தீயை எப்படி அணைப்பார்கள்? இந்தத் தீயை எப்படி கட்டுக்குள் கொண்டு வருவார்கள்? என்று மக்களெல்லாம் நினைத்து,*

2022 ஏப்ரல் 29] [திரு. ச. அரவிந்த் ரமேஷ்]

அதிர்ச்சியுடன் இருந்தார்கள். 10 ஏக்கர்களில் பரவியிருந்த அந்தத் தீயானது, இப்போது 1 ஏக்கருக்குள் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. தற்போது வெறும் புகை மட்டும்தான் வெளியே வந்து கொண்டிருக்கிறது. அதற்காக, 2 Sky Lift, *தீயணைப்புத் துறையின் 11 தீயணைப்பு வாகனங்கள் மற்றும் 300 லாரிகளுக்கும் மேலாக தண்ணீர் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று, அந்தப் பகுதியில் இருக்கின்ற 11* JCB *இயந்திரங்கள், 8 பொக்லைன் இயந்திரங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி, சென்னை மாநகராட்சியினுடைய 300–க்கும் மேற்பட்ட பணியாளர்கள், . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்களே பதில் சொன்னதுபோன்று உள்ளது. போதும். நீங்கள் அரசின் கவனத்தைத்தான் ஈர்க்க வேண்டும். நீங்கள் சப்ஜெக்ட்டை மட்டும் சொல்லுங்கள்.*

திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *சிறப்பாகப் பணியாற்றுகின்ற ஒரு நிலையில், தமிழக அரசு வேகமாக இந்தத் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்திருக்கிறது என்று அங்கிருக்கிற மக்களெல்லாம் பெருமையோடு கூறிக் கொண்டிருக்கின்றார்கள். அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் பம்பரம் போன்று சுழன்று தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதில், களைவதில் மிகச் சிறப்பாக பணியாற்றி வருகிறார். அவருக்கு என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

நேற்றையதினம், பெருங்குடியில் தீ விபத்து ஏற்பட்டபோது, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளோடு களத்திற்குச் சென்று, நேடியாக ஆய்வில் ஈடுபட்டு, அதைத் தடுப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன். மருத்துவக் கழிவுகள் மற்றும் பாலிதீன் போன்ற பிளாஸ்டிக் பொருட்கள் எரிகின்றபோது, டை–ஆக்சைடு என்கிற ஒரு வாயு வெளியேறும். மனிதர்களுடைய உயிரிழப்புக்கு பெரிதும் காரணமாகின்ற ஒரு வாயுவாக இது இருக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பேரூராட்சிகளிலும், நகராட்சிகளிலும் இந்தப் பிரச்சினைகள் இருக்கின்றன.

[திரு. தி. வேல்முருகன்] [2022 ஏப்ரல் 29

குறிப்பாக, பண்ருட்டி, நெல்லிக்குப்பத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பல கோடி ரூபாய் நிதியை அளித்து, இதற்கான ஒரு மாற்றுத் திட்டத்தை அறிவித்தார்கள். மக்கள் அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். எனவே, மக்கள் இந்தக் காற்றை சுவாசிக்காத இடங்களில், வனத் துறையின் அனுமதியைப் பெற்று, தமிழ்நாடு முழுவதும் இருக்கிற இந்தக் குப்பைகளை வன விலங்குகள் மற்றும் மனித உயிர்களுக்கு ஆபத்து ஏற்படாதவண்ணம் வேறு இடங்களில் மறுசுழற்சி முறையில் மாற்றுவதற்கு, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்கின்ற அடிப்படையில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் நல்ல ஆலோசனையைக் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

முற்பகல் 11–25

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடை வெப்பம், அக்னி வெயிலின் காரணமாக, மீத்தேன் வாயு ஏற்பட்டு, பெருங்குடி பகுதியில் கொட்டி வைக்கப்பட்டிருக்கின்ற குப்பையில் தீ பிடித்தது என்பதைப் பத்திரிகைகள் வாயிலாக படித்தோம். தற்போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் வேகமாகச் செயல்பட்டு அதைக் கட்டுக்குள் கொண்டு வந்திருக்கிறார்கள்; பாராட்டுக்குரியது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1996–ல் வணக்கத்திற்குரிய மேயராக இருந்தபோது 10 மண்டலங்களிலே பாதுகாக்கப்பட்ட பகுதியாகக் குப்பைகளைத் தரம் பிரித்து, Biomining செய்வதற்கு அப்போதே திட்டமிட்டதாகப் பத்திரிகைகளிலே படித்திருக்கிறோம்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களிடம் நாங்கள் கேட்டுக்கொள்வதெல்லாம், பெருங்குடியில் 225 ஏக்கரில் குப்பைக் கொட்டப்படுகிறது. இந்தக் குப்பையை மக்கும் குப்பை, மக்காத குப்பை, அதற்குப் பிறகு அதனை biomining செய்வதாகவும் நாங்கள் பத்திரிகையிலே படித்திருக்கிறோம். இதனுடன் சுற்றுச்சூழல் பிரச்சினையும், சுகாதாரப் பிரச்சினையும் சேர்ந்திருக்கிறது. இன்று

பெருங்குடி; இன்னும் சென்னையிலே கொடுங்கையூர் இருக்கிறது. பெருங்குடியில் 9–வது மண்டலம் முதல் 15–வது மண்டலம் வரை, அதாவது ஏழு மண்டலங்களின் குப்பைகள் அங்கே கொட்டப்படுகின்றன. மீதி மண்டலங்களிலுள்ள குப்பைகள் கொடுங்கையூரில் கொட்டப்படுகின்றன. மொத்தம் 5,100 மெட்ரிக் டன் குப்பைகள் தினமும் சென்னையில் சேகரிக்கப்படுகின்றன. இந்தக் குப்பைகளைத் தரம் பிரித்து, biomining செய்தாலும்கூட இனிவரும் காலங்களில் இந்தக் குப்பைகளில் இப்படி தீப்பிடிக்காதவண்ணம் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை வைக்கின்றேன்.

தமிழகத்திலே 144 நகர்ப்புற உள்ளாட்சிகளில் 2 கோடி டன் குப்பை உள்ளதாகவும், 44 இடங்களில் உள்ள குப்பைகளை அகற்றி, 164 ஏக்கர் நிலங்களை மீட்டெடுத்ததாகவும் பத்திரிகைகளில் செய்தி படித்தோம். இந்த 164 ஏக்கர் நிலங்களைப் பாதுகாக்க வேண்டும். இதற்கு முன்னால் இந்தக் குப்பைமேடுகளையெல்லாம் அழித்து, அதில் குடிசைகள் போட்டு, விற்பனை செய்து, பல நகர்கள் உருவாகியிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், போதும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். கவனத்தை ஈர்த்து அமருங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: ஒரே ஒரு நிமிடம். இந்த நகர்களெல்லாம் உருவாகாமல் நிலத்தைப் பாதுகாக்க வேண்டும். நிலத்தடி நீர், நிலங்களைப் பாதுகாக்க வேண்டும். சென்னை, நெசப்பாக்கம் பகுதியிலே குப்பைமேட்டை டாக்டர் காணு நகர் என்று உருவாக்கியிருக்கிறார்கள். இப்படி உருவாகாமல் இருப்பதற்கு நீங்கள் உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று குப்பைக் கொட்டக்கூடிய அந்தத் தளங்களிலே சேர்கின்ற குப்பையினுடைய அளவு மிக முக்கியமாகக் கருதப்படுகிறது. குப்பைகளைச் சேகரிக்கக்கூடிய இடத்திலேயே, கொட்டக்கூடிய குப்பைகளின் அளவைக்

குறைப்பதற்கான நடவடிக்கைகள் வேண்டும். அந்தவகையிலே சாலைகளிலே இருக்கக்கூடிய குப்பைகளை ஒரு தனியார் நிறுவனம் பிரித்து, இங்கே கொண்டு வந்து கொட்டுகிறது; அடுக்குமாடிக் குடியிருப்புகளில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அந்தக் குப்பையை எடுத்து Micro Composting Centre உடன் ஒப்பந்தத்தைப் போட்டு அங்கே பிரித்துக் கொடுக்கிறது. ஆனால், அப்படி ஒப்பந்தத்தைப் போடக்கூடிய நிறுவனங்கள், ஒன்று, இரண்டு நிறுவனங்கள்தான் இருக்கின்றன. பல அடுக்குமாடிக் குடியிருப்புகளில் எடுக்கப்படுகின்ற அந்தக் குப்பைகளை MCC–க்களில் முறையாகக் கொண்டுபோய் சேர்ப்பதில்லை என்கின்ற ஒரு நிலையிருக்கிறது.

அதோடுமட்டுமல்லாமல், இன்றைக்கு Landfill Site என்பது நீண்ட நெடுங்காலமாக அங்கே இருக்கின்றது. இதுபோன்ற Landfill Site–கள் 20 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கக் கூடாது என்கின்ற ஒரு நிலை இருக்கிறது. அந்தப் பகுதியிலேயே biomining–க்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் இன்னும் துரிதமாகச் செய்யப்பட வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல், இந்தக் குப்பைகளைத் தரம் பிரிக்கக்கூடிய அந்தப் பணிகளைச் சிறப்பாக செய்ய வேண்டும் என்கின்ற ஒரு சூழல் எழுந்திருக்கிறது. அது, குப்பையைச் சேகரிக்கும் நிறுவனமாக இருந்தாலும் சரி அல்லது அடுக்குமாடிக் குடியிருப்புகளிலிருந்து குப்பைகளை எடுக்கக்கூடிய நிறுவனமாக இருந்தாலும் சரி, தரம் பிரிப்பதிலே மிக அதிக கவனம் செலுத்த வேண்டிய சூழல் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் தெளிவுபடுத்திவிட்டார்கள்.

திரு. S.S. பாலாஜி: இதில் சுருக்கமாகப் பேச முடியாது; விரிவாகச் சொல்ல வேண்டும். பல ஆண்டுக் காலமாக இருக்கக்கூடிய பிரச்சினை. சென்னையில் இருப்பவர்களுக்குத்தான் இந்தப் பிரச்சினை. இந்தக் குப்பையை எரிப்பதற்கு கொடுங்கையூரிலே Incinerator இருக்கிறது. இன்னும் 2 Incinerators போடுவதற்காகக் கடந்த காலத்திலே அதற்கான முன்மொழிவு கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Zero Hour–ல் நீங்கள் சுருக்கமாக அரசின் கவனத்தை ஈர்த்தால் சரி.

2022 ஏப்ரல் 29]

திரு. S.S. பாலாஜி: Incinerator போடுவதற்கான வாய்ப்புகளையும் உருவாக்க வேண்டும். இந்தப் பிரச்சினை நீண்ட நெடுநாட்களாக சென்னையிலே இருக்கக்கூடிய பிரச்சினை. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோதும் சரி, அதற்கு முன்பு தேர்தல் அறிக்கையிலும் சுற்றுச்சூழல் தொடர்பான பல நடவடிக்கைகளை முன்மொழிந்து இருக்கிறார்கள். அவரே, சென்னை மாநகராட்சியினுடைய மேயராக இருந்தபோதும் அதையெல்லாம் கவனத்திலே கொண்டு மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறார். அந்தவகையிலே இந்தத் தருணத்தில் அவருடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா, உங்கள் கட்சி சார்பாக விதி 55-ல் கவனத்தை ஈர்ப்பதற்கு நீங்கள் யாருமே எழுதித் தரவில்லை. இருந்தாலும் நீங்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெருங்குடி பகுதியிலே தீப்பிடித்து, அதை அணைத்தது பற்றி, சட்டமன்ற உறுப்பினர்கள் என்னென்ன நடவடிக்கைகளெல்லாம் எடுக்கப்பட்டன என்பது பற்றியெல்லாம் சொன்னார்கள். இது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கக்கூடிய பிரச்சினை. அதுமட்டுமல்லாமல், 60, 70 ஆண்டுக்காலமாக இந்தக் குப்பைப் பிரச்சினை இருக்கின்றது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும், அண்ணன் எடப்பாடியார் அவர்கள் இருந்தபோதும் biomining முறையைக் கொண்டுவந்தார்கள். அதேபோல 2006 ஆம் ஆண்டு நீங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதுகூட கோயம்புத்தூரில் இருக்கும் குப்பைக் கிடங்கிற்கு ஒரு திட்டம் கொண்டு வந்திருக்கிறீர்கள். அது இதுவரையில் இருக்கிறது. அதற்குப் பிறகு அம்மா அவர்களும், அண்ணன் எடப்பாடியார் அவர்களும் biomining முறையைக் கொண்டு வந்தார்கள். அதைச் சென்னையிலும் மற்றும் விவசாயிகள் உரம் தயாரிக்கக்கூடிய இடத்திலும் பயன்படுத்தியிருக்கிறோம்.

முற்பகல் 11-30

குறிப்பாக, குப்பைகளில் நிறைய காகிதம் இருக்கும். அதை எடுப்பதற்காகவும், கம்பிகளை எடுப்பதற்காகவும் சில சமயங்களில் சிலரால் குப்பைகளில் தீ வைக்கும் நிகழ்வுகள் நடக்கின்றன. சில

நேரங்களில் எரிவாயு எடுப்பதற்குள் அது தீ பிடித்துக்கொள்கிறது. தீயணைப்புத் துறை, காவல் துறை தொடர்ந்து கண்காணிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய இடங்களில் அதிகமான borewell–களை அமைக்க வேண்டும். இதற்கு முன்பும் அமைத்திருக்கிறோம். இன்னும் அதிகமான borewells அமைத்து, அங்கே அதிகமான water source–ஐயும் ஏற்படுத்தி, தீப்பிடித்தால் குப்பைகளை அணைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திரு. கே.என். நேரு:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று காலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சம்பவம் நிகழ்ந்த இடத்திற்கு உடனடியாகச் சென்று அந்தத் தீயை அணைப்பதற்கான பணியை முடுக்கிவிட வேண்டுமென்றும், விரைவாகத் தீயை அணைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்றும் எங்களுக்கெல்லாம் உத்தரவிட்டார்கள். நானும், மாநகராட்சியினுடைய அதிகாரிகளும் அந்த இடத்திற்குச் சென்றோம். பெருங்குடி குப்பைக் கிடங்கு என்பது கிட்டத்தட்ட 225 ஏக்கர் பரப்பளவில் இருக்கிறது. அங்கு வரிசையாக, நிரந்தரமாகக் குப்பைகள் கொட்டிக் கொண்டு வருகிறார்கள். நேற்றிலிருந்து அதற்கு நடுவிலே ஒரு பாதை அமைத்து, இந்தத் தீ அங்கு மேலும் பரவாமல் இருப்பதற்கான வேலையும் அங்கு நடந்து கொண்டிருக்கின்றது. குறிப்பாக, மண்டலங்கள் 9–லிருந்து 15 வரையிலான 7 மண்டலங்களில் இருக்கின்ற குப்பைகள் அங்கு சேகரிக்கப்பட்டு, மறுசுழற்சிக்கு உட்படுத்தப்பட்டு எஞ்சிய குப்பைகள் இங்கு சேகரிக்கப்படுகிறது. இதுமட்டுமல்லாமல் 25 ஆண்டுக் காலமாக இங்கு குப்பைகள் கொட்டப்பட்டு வருகின்றன. மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் அந்த இடத்திற்கு நேரடியாகச் சென்று பார்த்தோம். அதை Bio–mining முறையில் விரைந்து செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். அங்கிருப்பவர்களுக்கெல்லாம் மின்சாரம் கிடைக்காமல் இருந்தது. அதற்கும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் சொல்லி, உடனடியாக அவர்களுக்கு மின்சார இணைப்பு தருவதற்கான அந்தப் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

2022 ஏப்ரல் 29] [திரு. கே.என். நேரு]

இப்போது நடைபெற்ற தீ விபத்திற்குக் காரணம், தென்னை நார்க் கழிவு அங்கே கொட்டப்பட்டுள்ளது. இப்போது வெயில் அதிகமாக இருக்கின்றது. வெயில் அதிகமாகும்போது அந்த தென்னை நார்க் கழிவிலிருந்து மீத்தேன் வாயு உற்பத்தியாகி தானாகவே தீ பற்றிக்கொண்டது. 225 ஏக்கர் பரப்பளவில் உள்ள குப்பைகளில் வெறும் 7, 8 ஏக்கருக்கு உள்ளாக இருக்கின்ற தீயை அணைப்பதற்குரிய அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டன.

மொத்தம் 12 தீயணைப்பு வாகனங்கள் இருக்கின்றன. Sky lift *உடன் உயரமாக இருக்கின்ற வாகனங்கள் இரண்டு இருக்கின்றன. தீயணைப்புத் துறையினுடைய* DGP *அங்கே இருக்கிறார். மாநகராட்சி ஆணையர் அவர்களும் இரவும் பகலும் அங்கே இருக்கிறார். குடிநீர் வழங்கல் துறை* MD*–யும் அங்கேயே இருக்கிறார். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அருகிலே மறுசுழற்சி செய்கின்ற மெட்ரோ வாட்டரினுடைய கிளை அங்கு இருக்கின்ற காரணத்தினால், தண்ணீர் அங்கேயே கிடைக்கின்றது. எனவே, தண்ணீர் அருகிலே இருக்கின்ற காரணத்தினால், அனைத்துப் பணிகளும் விரைவாக நடைபெற்று, தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்திருக்கிறோம். புகைக்காகத் தொடர்ந்து தண்ணீர் அடித்துக்கொண்டே இருக்க வேண்டிய நிலை இருக்கின்றது. தண்ணீர் அடிப்பதைக் கொஞ்சம் நிறுத்தினால், உள்ளே இருந்து மறுபடியும் தீ வருகிறது; புகை வருகிறது. எனவே, அதற்கான பணியை இப்போது முழுமையாகச் செய்து கொண்டிருக்கிறோம். நாளைக்குள் முழுமையாக எல்லா பணிகளும் முடிந்துவிடும். புகையும் நின்றுவிடும்.*

இதை நிரந்தரமாகத் தீர்க்க வேண்டுமென்பதற்காகத்தான், நேற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன்பேரில், இந்தத் துறையினுடைய அதிகாரிகள், சென்னை மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் துறைச் செயலாளர் ஆகியோர் ஹைதராபாத்துக்குச் சென்றார்கள். அங்கு குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அங்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டு வந்திருக்கிறார்கள். விரைவிலே, தமிழ்நாட்டில் மூன்று இடங்களில், மக்காத குப்பை எடுத்து மாநகராட்சி மூலமாக மின்சாரம் தயாரிக்கின்ற திட்டமும் இப்போது உருவாக்கப்பட்டுள்ளது. ஹைதராபாத்தில் செயல்படுத்தப்படும் அந்தத் திட்டத்தை நேற்று பார்த்தபோது,

[திரு. கே.என். நேரு] [2022 ஏப்ரல் 29

குப்பையை மூடி, அதில் ஒரு குழாயைச் சொருகி, அதிலிருந்து மீத்தேன் வாயு எடுத்து, சிலிண்டரில் நிரப்பி விற்கக்கூடிய ஒரு நிலையைப் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள்.

இந்தத் துறை என்பது, தொடர்ந்து இந்தப் பிரச்சினையை எப்படிச் சரிசெய்வது; சென்னை மட்டுமல்ல, அனைத்து நகரங்களிலும் இந்தப் பிரச்சினை இருக்கின்றது. நகரங்களில், பேரூராட்சிகளில் இடம் இல்லாத காரணத்தினால் குப்பைகள் கொட்டுவதற்காக நீண்டதூரம் தள்ளிப் போக வேண்டியிருக்கிறது. அந்தக் கிராமப் பகுதி மக்கள் அங்கு குப்பையைக் கொட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். எனவே, இப்போது நிலம் கையகப்படுத்த முடியாது என்ற காரணத்தினால், private–ல் நிலம் வாங்கி, ஒவ்வோர் இடத்திலும் நிலம் கொடுத்து, அந்த இடத்திலேயே குப்பையைச் சேகரித்து, மறுசுழற்சிக்கு உட்படுத்தப்படுகின்ற பணிகள் அனைத்து பகுதிகளிலும் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே, கொடுங்கையூர் மட்டுமல்ல, பெருங்குடி மட்டுமல்ல, இன்னும் இரண்டாண்டுக் காலத்தில் பெருங்குடிப் பகுதியில் இருக்கின்ற அனைத்து குப்பைகளும் சரி செய்யப்படுமளவுக்கு அங்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதை உதாரணமாக வைத்து மற்ற நகராட்சிகளிலும் பேரூராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் முன்னெச்சரிக்கையாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) திருப்பரங்குன்றம் முருகன் கோயில், வாகன நிறுத்துமிடம் அமைத்தல், தங்கும் விடுதிகளை நவீனப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள், என்னவென்று சொல்லுங்கள். நீங்கள், விதி 55–ன்கீழ் ஓர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். சுருக்கமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவாருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன் என்று சொன்னதால், நீங்கள் ஒரு நிமிடத்தில் சொல்லி முடியுங்கள்.

முற்பகல் 11–35

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு